பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 26 | செவ்வாய்க்கிழமை | 09.04.2024 | அதிர்வு 252

## கம்பஹாவில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

கம்பஹா, மாகேவிட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் 06



# அரச பெரும்புள்ளிகளின் தயவிலேயேதான் சம்பந்தனின் கொழும்பு இல்ல வாழ்க்கை!

## அதனால்தானாம் தமிழ்ப் பொதுவேட்பாளர் திட்டத்தை அவர் எதிர்க்கிறார் என விக்னேஸ்வரன் வியாக்கியானம்

"துரதிஷ்டவசமாகத் தனது சொந்தக் காரணங்களுக்காகத் தமிழ் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதை சம்பந்தன் எதிர்க்கின்றார். அவர் தற்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே வாழ்ந்து வருகின்றார். அரச பெரும்புள்ளிகளின் தயவிலேயே அவர் அங்கு வாழ்கின்றார். சிங்கள வேட்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப்போவதை இதனால்தான் அவர் எதிர்க்கின்றார். தமிழர்களின் இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் - தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்திப்பாரானால் - தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் நிலைப்பாட்டுக்கு வியாக்கியானம் கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். 06

# ஜே.வி.பிதான் ஆட்சியமைக்கும்

## முன்னாள் எம்.பி. லால் காந்த நம்பிக்கை



"அரசு எப்படித்தான் திட்டம் தீட்டினாலும் அடுத்து ஆட்சிப்பீடம் ஏறப்போவது ஜே.வி.பிதான் என்பதில் சந்தேகம் இல்லை."

- இவ்வாறு ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான லால் காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"முதலில் எந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அரசு எந்தத் தேர்தல் 06




பாடசாலைகளின் மெய்வமைப் போட்டிகளின் இல்ல அலங்காரங்களில் கார்த்திகை பூ வடிவம் மற்றும் இராணுவ டாங்கி வடிவம் போன்றவை இடம்பெற்றமைக்காகப் பாடசாலை நிர்வாகம், சம்பந்தப்பட்ட மாணவர்கள், ஆசிரிய வழிகாட்டிகள் எல்லாம் இங்கு நோண்டப்பட்டனர்.

இந்தச் சில்லெடுப்புகள் எல்லாம் தமிழர் தாயகத்தில் – வடக்கு கிழக்கில் – மட்டும்தான் என்று நினைத்திருந்தேன். ஆனால் அது தவறு என்பது இப்போது தெரிகின்றது.

தெற்கிலும் அந்த நோண்டல்கள், நொட்டல்கள் எல்லாம் இருக்கின்றன என்று இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

கம்பஹாவில் ஒரு முன்னணிப் பாடசாலையில் விளையாட்டு நிகழ்வு 06

# சஜித்தின் ஆட்சியில் 48 மணி நேரத்துக்குள் மலையகத்துக்கான ஜனாதிபதி செயலணி

## மனோ கணேசன் எம்.பி. உறுதி



(பசறை நிருபர்)

"தமிழ் முற்போக்குக் கூட்டணி தூங்கிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சியல்ல, மலையக மக்கள் நலனுக்காக என்றும் விழித்தெழுந்து சேவை செய்யும் கட்சி என்பதை எமது கடந்த கால அரசியல் செயற்பாடுகள் மூலமாக நிரூபித்துள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாகும் அரசின் ஊடாக மலையக மக்கள் நலன் பேணும் வகையில் 48 மணித்தியாலயத்தில் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பதுளை தபாலகக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளராகவும், பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளராகவும் சமூக சேவையாளரும் வர்த்தகருமான பகிரதன் பாலச்சந்திரனை அறிமுகம் செய்து நியமனம் வழங்கும் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"எமது கூட்டணிக்குள் எட்டப்பட்ட புரிந்துணர்வுக்கு அமைய பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனம் மலையக மக்கள் முன்னணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் இன்று எமது கட்சியில் இல்லை.

இவ்வருடம் தேர்தல் வருடமாகும். தேர்தல் கலண்டர் படி முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். யார் ஜனாதிபதியாகத் தெரிவானாலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும். அவ்வாறு நடத்தப்படும் தேர்தலில் எமது கூட்டணி சார்பாகப் போட்டியிடவுள்ள மண்ணின் மைந்தனான பகி பாலச்சந்திரனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இம்மாவட்டத்தில் நாங்கள் அரசியல் தலைமையை உருவாக்கியுள்ளோம். அதை நீங்கள் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

மக்கள் பணி செய்ய வயது ஒரு தடையல்ல. வயது என்பது இலக்கம், வாழ்க்கை என்பது இயக்கம். இதை மனதில் கொண்டு நேர்மை, துணிச்சல், தூரநோக்கு மற்றும் அர்ப்பணிப்பு இருந்தால் நாம் சாதிக்க முடியும்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு, கம்பஹா, கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் போட்டியிட்டு நாம் 4 இலட்சத்து 13 ஆயிரத்திற்கும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளோம். இவ்வாக்குகள் நாட்டின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக அமையும். எதிர்வரும் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் உங்கள் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும்.

எமது ஆட்சியில் உருவாக்கப்படவுள்ள மலையகத்துக்கான செயலணி மூலம் பெருந்தோட்ட மக்களைத் தொழில் முனைவர்களாவும், சிறுதோட்ட உரிமையாளர்களாவும் மாற்றத் தேவையான துரித நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். எம் மக்கள் என்றும் தினக்கூலிகளாக இருப்பதை அனுமதிக்க முடியாது. அவர்களைத் தன்மானம், சுய கௌரவம் உள்ளவர்களாக நிச்சயம் மாற்றி காட்டுவோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி நல்லாட்சி அரசில் 4 வருடங்கள் அங்கம் வகித்து 40 வருட ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை வகித்த மலையக அரசியல் தலைமைகள் செய்யாத வற்றைச் செய்து காட்டினோம்.

சொந்தக் காணி, தனி வீடு, மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு 2 ஏக்கர் காணி, நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கம் என்பவை அவற்றுள் சிலவாகும்.

எனினும், எம் மக்கள் இன்றும் கல்வி, வாழ்விடக் காணி , வாழ்வாதாரக் காணி, பொருளாதாரம் என்பவற்றில் தொடர்ந்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவற்றைத் தீர்ப்பதற்கு எம்மிடம் தூரநோக்குடன் கூடிய வேலைத்திட்டம் உள்ளது.

எமது பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் பலம் அவசியம். பதுளை மாவட்டத்தில் பகி பாலச்சந்திரனை வெற்றி பெறச் செய்து எமக்கு அங்கீகாரம் தாருங்கள். பகியின் அரசியல் பிரவேசம் சிலருக்குப் பகீர் எனும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஒற்றுமையாக இருந்து சாதித்துக் காட்டுவோம்."

– என்றார்.

# திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட 13 பேரும், உதவிய பத்துப் பேரும் கைது

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் 13 பேரும் அவர்களுக்கு உதவினர் எனச் சந்தேகிக்கப்படும் 10 பேரும் விசேட பொலிஸ் குழுக்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் "யுக்திய" போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு இணையாக தென் மற்றும் மேல் மாகாணங்களில் திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப் படுத்துவதற்காக 20 பொலிஸ் குழுக்களினால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட பொலிஸ் குழுக்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் தென் மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள, இந்த நடவடிக்கையில் இதுவரை மொத்தமாக 327 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைதானவர்கள் மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு, மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவு, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு, காலி குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் களுத்துறை குற்றப் பிரிவு ஆகியவற்றினூடாக தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் சமூகத்தில் கருத்தியல் ரீதியிலான மாற்றம் ஏற்படுத்தப்படும்

## சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவிப்பு



"இம்முறை புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மாற்றுத்திறனாளிகள் குறித்து சமுதாயத்தில் கருத்தியல் ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, "முட்டி உடைத்தல்", "குருடனுக்கு உணவளித்தல்" என்பன "அதிர்ஷ்ட பானையை உடைத்தல்", "பார்வையற்றவர்களுக்கு உணவளித்தல்" என மாற்றப்பட்டுள்ளது."

– இவ்வாறு சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த வருடத்தின் கடைசி காலாண்டிற்குப் பிறகு, இந்த நாட்டில் பொருளாதாரச் சுருக்கம் குறைந்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பொருளாதாரமாக மாறும் திறனைப் பெற்றுள்ளோம். நுகர்வோருக்கு கட்டுப்படியாகாத வாழ்க்கைச் செலவுக்குத் தீர்வுகளை வழங்குவதே எமது பொருளாதாரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆனால் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இம்முறையும் புத்தாண்டை வழமை போன்று கொண்டாட மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் இவ்வருட புத்தாண்டுக்காக சமுர்த்தி வேலைத்திட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளும் இணைந்து நாடளாவிய ரீதியில் 1089 புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளன.

அதன்போது மாற்றுத்திறனாளிகள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. "முட்டி உடைத்தல், குருடர்களுக்கு உணவளித்தல்" என்ற அம்சங்கள் சமூகத்தால் இதுவரை நிராகரிக்கப்பட்டுள்ளன. அதனை எமது அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கு பதிலாக, "அதிர்ஷ்டத்தின் பானையை உடைத்தல்" மற்றும் "தோழனுக்கு உணவளித்தல்" என்ற பெயர்களைப் பயன்படுத்துமாறு ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சமூகத்தில் கருத்தியல் ரீதியிலான மாற்றத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். மேலும், புத்தாண்டு விழாக்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும், இந்த நாட்டில் சுற்றுலாத்துறை கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த புதிய வேலைத்திட்டத்தின் காரணமாக இந்த ஆண்டு இதுவரை 635,784 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். அதன் மூலம் நாடு 1025 மில்லியன் அமெரிக்க டொலர்களை சம்பாதித்துள்ளது. அனைத்து அமைச்சுகளும் சமூக வலுவூட்டல் திட்டங்களைத் தொடங்கியுள்ளன.

10,000 குடும்பங்களுக்கு கிராமத்தில் கோழிப் பண்ணை உற்பத்தி மையங்கள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் இத்திட்டத்தை ஆரம்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் தயாராக உள்ளன என்பதைக் கூற வேண்டும். அதற்கான கடன்களும் உதவிகளும் வழங்கப்பட உள்ளன. தேயிலை பயிர்ச்செய்கைக்காக 14,000 குடும்பங்களுக்கு தேயிலைச் செடிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும், அஸ்வெசும பயனாளிகளுக்கு இலவச தேயிலை செடிகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஏனைய குடும்பங்களுக்கு 36 வீதமாக இருந்த வட்டியைக் குறைத்து 12 சதவீத சலுகைக் கடன் வழங்கப்படுகிறது. மேலும், பெண்கள் "லிய சவிய" திட்டத்துடன் இணைந்து, எதிர்வரும் மே மாதம் முதல் எந்த ஒரு உற்பத்திக்கும் 12 வீத வட்டியில் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும்." – என்றார்.

# மின்சார திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது



மின்சார திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் தமது எக்ஸ் தளத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, மேற்படி சட்டமூலத்தை இந்த வாரத்தில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், இந்த மாத இறுதியில் நாடாளுமன்றில் முன்வைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை, நாடாளுமன்றில் சமர்ப்பித்த தினத்தில் இருந்து இரண்டு வாரங்களுக்கு அதனை சவாலுக்கு உட்படுத்த பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் கடந்த வருடம் 50 பேர் நீரில் மூழ்கிப் பலி



நீரில் மூழ்கி வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 50 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸ் பிராந்தியத்திலேயே அதிகமானோர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்ட தகவலுக்கு வழங்கப்பட்டுள்ள பதிலில், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் 13 பேரும், காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்தில் 2 பேரும், மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 6 பேரும், வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 5 பேரும், முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 8 பேரும், கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 16 பேருமாக 50 பேர் உயிரிழந்துள்ளனர்.






# இளைஞர்கள் கோரும் மாற்றத்தை வழங்க புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





“நாட்டை விரைவான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு இளைஞர்கள் கோரும் மாற்றத்தை வழங்கி நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கி வருகின்றோம்.

புதிய பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பான அடிப்படை சட்டங்கள் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஜூன் மாதம் நிறைவேற்றப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற “என்னில் இருந்து ஆரம்பிப்போம்“ கண்டி மாவட்ட இளைஞர் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டை விரைவான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லாவிட்டால், நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தம்பிக்க வைப்பதா, முன்னோக்கி கொண்டு செல்வதா அல்லது வீழ்ச்சியடைய வைப்பதா என்பதை இளைஞர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

இன்றைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் நிராகரிக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். அனைவருக்கும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான நிதி திறன் இல்லை. எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத் திட்டம் குறித்து இளைஞர்கள் திருப்தி அடையவில்லை. மாற்றத்தை கோருகிறார்கள். அந்த மாற்றத்தை வழங்குவதற்காக நாட்டில் புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் செயற்பட்டு வருகிறோம். அதற்குத் தேவையான அடிப்படை சட்டங்கள் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஜூன் மாதம் நிறைவேற்றப்படும். பொருளாதாரத்தை மாற்ற, நாட்டின் சட்ட முறைமையும் மாற வேண்டும்.

நாட்டை விரைவான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர்த்துவதற்கு அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் ஒத்துழைப்பும் தேவை. அவ்வாறு செய்ய முடியாவிட்டால், நிறுவனத்தின் கட்டமைப்பை மாற்ற வேண்டும்.

மேலும், கிராமத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. ஒவ்வொரு வளர்ந்த நாடும் கிராமப்புற விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளது. எனவேதான் நவீன விவசாயத்தை கிராமத்துக்கு கொண்டு செல்ல விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம்.

அப்படியானால், இளைஞர்களாகிய நீங்கள் மாற்றத்துடன் முன்னேறுவதா அல்லது ஒரே இடத்தில் தேக்க நிலையில் இருப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்றபோது, இளைஞர்கள் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன தெரிவித்தார். “நீங்கள் செய்யத் தயாராக இருந்தால், தேவையான வழிகாட்டுதலைத் தருகிறேன்” என்றார்.

அதன்படி இளைஞர்களான நாம் தேர்தலில் போட்டியிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றோம். அதன் பின்னர் அவர் மகாவலி வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். 30 வருடங்கள் என்று கூறப்பட்ட மகாவலி வேலைத்திட்டம் 10 வருடங்களில் நிறைவு பெற்றது.

மேலும் நாட்டுக்குத் தேவையான மின்சாரம் வழங்கப்பட்டது. ஜே.ஆர் ஜெயவர்தனவின் காலத்தில் இரண்டு வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நாடு முழுவதும் 200 ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தினார்.

நாம் அன்று இளைஞர்களாக இந்தத் திட்டங்களைக் கோரினோம். இளைஞர்களாகிய நீங்கள் இன்று அதற்குத் தயாரானால் இணைந்து இந்தப் பயணத்தை

05





# உயர்வான சமூக பாதுகாப்பு திட்டம் இப்போது நடைமுறையில் உள்ளது

## ஜனாதிபதி அலுவலகப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 200 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டு மக்கள் எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரச் சிரமங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் தனது பொறுப்பாகக் கருதுகிறது.

சமுர்த்தி உதவி, சமுர்த்தி கடன், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, 100 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் அஸ்வெசும கொடுப்பனவு என 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 184,098.27 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் நிவாரண உதவித்தொகை தேவைப்படும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அஸ்வெசும மேல்முறையீடுகள் மற்றும் நிலுவைகள் உட்பட 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை சுமார் 189,650.95 மில்லியன் ரூபா (189.6 பில்லியன்) ஆகும்.

முதல் கட்டமாக நிவாரணம் பெறாதவர்களுக்கு 2024 பெப்ரவரியில் 1813 மில்லியன் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது. இது தவிர அஸ்வெசும மேன்முறையீட்டு மனுக்களை பரிசீலித்த பின்னர் மேலும் 13,697.35 மில்லியன் ரூபா நிதி வறுமையில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி கடனாக வழங்கப்பட்ட தொகையுடன், 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 199,608.62 மில்லியன் அதாவது சுமார் 200 பில்லியன் ரூபா. 2022 ஜ"லை மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், டிசம்பர் 2023 வரை (17 மாதங்களுக்குள்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 129.93 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது, இதில் சமுர்த்தி கொடுப்பனவாக 65.91 பில்லியன் ரூபா ஏழைகளுக்கு வறுமையில் உள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்கு (பிறப்பு, திருமணம், இறப்பு, நோய்கள், புலமைப்பரிசில்கள், இரட்டைப் பிறப்புகள்) வழங்கப்படும் தொகை 4.52 பில்லியன் ரூபாவாகும். இது தவிர சமுர்த்தி வங்கி இதே காலப்பகுதியில் 59.5 பில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

ஜனசவிய, சமுர்த்தி போன்ற முன்னைய வேலைத் திட்டங்களில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள் மற்றும் அதிகாரத்துவத்துக்கு மாறாகவே அரசாங்கம் இந்த சமூகப் பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்துகிறது.

அதன்படி, நாட்டில் 30 இற்கும் மேற்பட்ட பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. நிவாரணத் திட்டத்திற்காக உலக வங்கி 200 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. அதனை 05 வருட அவகாசத்துடன் 30 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். 2024 மார்ச் 31, க்குள் நிவாரணப் பயனாளிகளின் எண்ணிக்கை 1,854,308 ஆக இருக்கும் என்பதையும் கூற வேண்டும்” – என்றார்.

# இளைஞர்கள் கோரும் மாற்றத்தை வழங்க புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்வோம். புதிய பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான சட்டங்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பொருளாதார மறுசீரமைப்புச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்து அந்தத் திட்டத்தைத் தொடங்குவோம். மேலும், அரசாங்கத்தின் நிதியை நிர்வாகம் செய்ய புதிய நிதி சட்டமூலத்தை கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று நாட்டில் பெரும்பான்மையான மக்கள் பெண்களாக இருந்தாலும், தொழில் செய்யும் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை. எனவே, பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இரண்டு புதிய சட்ட மூலங்களைக் கொண்டு வருகிறோம். இவை அனைத்தும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அதன் மூலம் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம். அந்த மாற்றத்திற்காக எங்களுடன் இணைய உங்களை அழைக்கிறேன்.

பொய் சொல்லி உங்களை ஏமாற்ற எந்தத் தரப்பினருக்கும் நான் இடமளிக்க மாட்டேன். உங்கள் பிரச்சினைகள் எனக்குப் புரிகிறது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவே இந்தப் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.” – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றின் போது மாணவர்கள் அணி, விசேட அதிரடி படையினர் காடுகளில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது பயன்படுத்தும் உரு மறைப்புச் சீருடைகளை ஒத்த உடையை அணிந்திருந்தமை அங்கு பெரும் சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றது.

இந்த விடயத்தை ஒட்டி பொலிஸ்மா அதிபர் நேரடியாக விடுத்த உத்தரவின் பேரில் பொலிஸ் தலைமையகத்தில் இருந்து சென்ற விசேட புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

அந்தக் கல்லூரியில் பொலிஸ் கடேற் என்று கூறப்படும் பொலிஸ் படை பயில் அணி உள்ளது. அதனுடன் தொடர்புபட்ட பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு மாணவர்கள் இத்தகைய சீருடையை அணிவது பற்றிய முற்கூட்டிய தகவல் தெரிந்திருந்தும் அவர் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தகவல் பொலிஸ் உயர் மட்டங்களைச் சீற்றத்துக்குள்ளாக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய அனுமதி பெறாமல் இத்தகைய சீருடைகளைப் பயன்படுத்தியமை மிக மோசமான குற்றமாக அதிகாரிகளினால் நோக்கப்படுகின்றதாம்.

மாணவர்கள் அணிந்த சீருடைகள் அனைத்தும் கம்பஹா தலைமையகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச்சீருடைகளைத்தைத்துக்கொடுத்த தையல்காரரும்கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். விசேட அதிரடி படையினருக்குரிய தனித்துவமான காட்டு உருமறைப்புச் சீருடைகளைத் தைத்த இந்த தையல்காரர் மேலதிக விசாரணைக்காக அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்கு எதிரான இந்த அத்துமீறல்களுக்காக – அதனைக் கண்டித்து – அங்குள்ள ஆசிரியர் சங்கங்கள் ஏதும் பொது அறிக்கை வெளியிட்டதாகவோ, மனித உரிமைகள் ஆனைக்குழுவில் முறையிட்டதாகவோ தெரியவரவில்லை.

---

## ஜே.வி.பிதான் ஆட்சிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலில் நடத்தப்படும் என்று கூறாமல் அமைதியாக இருப்பதன் மூலம் அரசின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசு எந்தத் தேர்தலிலும் வெல்லாது என்று பல ஆய்வுகள் கூறுகின்றன.

இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் அரசு தடுமாறுகின்றது. எப்படி வெல்லலாம் என்று அரசு திட்டம் தீட்டுகின்றது. எப்படித்தான் திட்டம் தீட்டினாலும் அடுத்து ஆட்சிப்பீடம் ஏறப்போவது ஜே.வி.பிதான் என்பதில் சந்தேகம் இல்லை." – என்றார்.

---

## கம்பஹாவில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையமொன்றின் உரிமையாளரான 34 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## அரச பெரும்புள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமதுமாதாந்தகேள்வி-பதில்அறிக்கை என்ற பெயரில் தாம் அனுப்பும் அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்திருக்கின்றார்.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:–

கேள்வி: ஐயா! நீங்கள் மத்திய அரசு கொண்டுவரும் சட்டங்கள் பற்றி நாடாளுமன்றத்தில் அதிகம் சிரத்தை காட்டுவதில்லை. முன்னர் நீதித்துறை, செயலாற்றுத்துறை சார்ந்தவராக இருந்து இன்று நீங்கள் சட்ட இயற்றுநராக இருக்கின்றபடியால் அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் நீங்கள் முன்னணியில் நின்று உதவி புரிய வேண்டும் அல்லவா? அவ்வாறு செய்வதில்லை ஏன்?

பதில்:– வெற்றிகரமான வாழ்க்கை வாழ்ந்துவிட்டு நாவிருபது வருடங்களுக்குப் பின்னரும் நாடாளுமன்றம் செல்ல உத்தேசித்தது பெரும்பான்மையினர் எம்மை ஆளுவதற்காக நான் அவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு அல்ல. முக்கியமாக தமிழ் மக்களின் அவலங்களை உலகறியச் செய்யவே நாடாளுமன்ற தேர்தலில் நான் பங்கேற்றேன்.

எனது பதவியானது நாட்டின் மற்றைய இனங்களுக்கும் உலகத்தோருக்கும் எமது வடக்குகிழக்கு தமிழர்கள் பற்றிய அறிவைக் கொண்டு செல்லவே பாவிக்கப்படுகின்றது. இதுவரையில் பல வெளிநாட்டுஅரசஅலுவலர்களுக்குஎம்உண்மை நிலைபற்றி அறிவித்துவிட்டேன். மேலும் எமது நாட்டின் மக்களின் வரலாறு பற்றியும் கூறி வருகின்றேன்.

அரசிடம் இருந்து அமைச்சுப் பதவிகளையோ வேறு சலுகைகளையோ பெற எத்தனிப்பவர்கள் தான் சிங்களப் பெரும்பான்மையோர் தமக்கு சாதகமாக சட்டம் இயற்ற விழையும் போது அவர்களுக்கு உதவி புரியவேண்டும்.

ஆனால், தமிழ் மக்களுக்குப் பாதகம் மற்றும் பங்கம் ஏற்படுத்தும் சட்டவரைவுகளை விமர்சித்தே வருகின்றேன். எனது நாடாளுமன்றப் பேச்சுக்களைப் பரிசீலித்துப் பார்ப்பீர்களானால் அது புரியும்.

எனது முக்கிய கடமையாக நான் ஏற்றுக்கொண்டிருப்பன பின்வருமாறு:–

1. தமிழ் மக்களின் அவலநிலையை உலகத்தோருக்கும் இந்நாட்டுமக்களுக்கும் எடுத்துக் கூறுவது.

2. நடக்கும் அநியாயங்களை அடையாளப்படுத்தி அவை நடவாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுப்பது.

3. எமது வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்துவது.

இந்த நோக்குடன் வடக்கு மாகாண சபையில் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வெளிக்கொண்டு வந்த இனவழிப்பு பற்றிய பிரேரணையின் ஒரு நீட்சியாக எம்மக்களுக்கு நடந்த அநியாயங்கள் பற்றிய முழு விவர நூல் ஒன்றினை எமது கட்சி வெளியிட இருக்கின்றது. வெகுவாக எனது நேரம் அதனுடன் செலவிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட பல கேள்வி பதில்கள், பிறநாட்டு இராஜதந்திரிகளுடனான கருத்துப் பரிமாற்றங்கள், தமிழ் ஆங்கில, சிங்கள செவ்விகள், மேடைப்பேச்சுகள் போன்ற வற்றின் மூலமும் எமது வரலாறு, எமது அண்மைய அவலநிலை , வருங்காலத்தில் நாம் முகங்கொடுக்கக் கூடிய இன்னல்கள் போன்ற பலவற்றைப் பற்றியும் ஊரறிய, உலகறியக் கூறி வருகின்றேன்.

சிங்களத் தலைவர்களை நான் அறிவேன். காரியம் ஆகும் வரையில் காலைப்பிடிப்பார்கள். காரியமானவுடன் கழுத்தைப் பிடிப்பார்கள். அவ்வாறான வர்களுக்கு எனது அறிவையும் நிபுணத்துவத்தையும் நேரத்தையும் செலவிடுவதால் எமது தமிழ்பேசும் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை.

இவ்வாறான சிந்தனையின் அடிப்படையிலேயே தமிழ்ப் பேசும் பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் பங்கு பற்ற வைக்க வேண்டும் என்று கூறி வருகின்றேன்.

சம்பந்தன் துரதிஷ்டவசமாகத் தனது சொந்தக் காரணங்களுக்காகத் தமிழ் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதை எதிர்க்கின்றார். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின்வருங்காலம்பற்றிஅவர்ஆழ்ந்துசிந்தித்தால், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி தேர்தலில் பங்கு பற்ற வைப்பதே உசிதமான செயல் என்று விளங்கும்.

சம்பந்தன் தற்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே வாழ்ந்து வருகின்றார். அரச பெரும்புள்ளிகளின் தயவிலேயே அவர் அங்கு வாழ்கின்றார். சிங்கள வேட்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப் போவதை இதனால்தான் அவர் எதிர்க்கின்றார். தமிழர்களின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் – தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திப்பாரானால் – தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும்.

தமிழ் பொதுவேட்பாளர் தகமைகள் உடையவராக இருந்தால் பல நன்மைகளை தமிழ்மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பார்.

1. தமிழர்களின் அரசியல் பிரச்சுனை இன்றுவரை தீரக்கப்படவில்லை என்பதையும் எமது பிரச்சினை என்ன என்பது பற்றியும் மக்களுக்கும் மற்றைய நாட்டவர்களுக்கும் அவர்களுக்குப் புரியும் மொழியில் சொல்லி வைக்கலாம்.

2. தமிழர்கள் எதைத் தீர்வாகப் பெற எத்தனிக்கிறார்கள் என்பது பற்றியும் அதற்கான காரணங்களையும் வெளிப்படையாக எடுத்துக் கூறலாம்.

3. தமிழ்ப் பேசும் மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டலாம்.

4. பேரம்பேசவரும்மற்றைய போட்டியாளர்களை எதைத் தருவீர்கள் என்று கேட்டு அவர்களை வெளிப்படையாக ஏற்க வைக்கலாம். இதற்கு ஏதேனும் ஒரு நாட்டின் இராஜதந்திரியை மத்தியஸ்தராக நிலைநிறுத்தி எழுத்தில் உடன்பாட்டைப் பெற்றபின் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்கலாம்.

5. பகிஷ்கரிப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது. அரச ஆதரவு சக்திகள் எங்கள் வாக்குகளையும் தமது தலைவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து விடுவார்கள். முன்னர் பகிஷ்கரித்தபடியால் பதவிக்கு வந்தவர்கள்தான் பகிஷ்கரிக்கக் கோரியவர்களை அழித்தார்கள். ஆயுதங்களை மௌனிக்கச் செய்தார்கள்.

6. இன்னுமொரு உபாயம் உள்ளது. தமிழர்கள் அனைவரையும் தமது வாக்குகளை தகுதியற்றதாக்கக் கோரலாம். ஆனால், அதிலும் அரச சார்பு சக்திகளின் நடவடிக்கைகள் எமக்கு தோல்வியையே நல்கும்.

என்னிடம் கேட்ட கேள்விக்கு மேலதிகமாகவே பதில் அளித்துள்ளேன். காரணம் எமது பிரச்சினை வேறு. மத்திய அரசின் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளின் பிரச்சினை வேறு. எம்மை பல மிழக்கச் செய்து, எமக்குப் பல இன்னல்களை விளைவிக்கும் மத்திய அரசுக்குத் துணைபோகாது, எமது மக்களுக்கான சேவையை ஆற்றுவதே எனது கடப்பாடு. அதனையே நான் செய்து வருகின்றேன்." – என்றுள்ளது.



# தீவுப் பகுதியின் மின் திட்டங்களுக்கு ஆரம்ப நிகழ்வு ஏதும் நடக்கவில்லை!

## நிலைமையத் தெளிவுபடுத்துகின்றனர் இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள்

(ந.லோகதயாளன)

தீவகத்தில் இடம்பெறும் மின் உற்பத்தி நிலைய பூமி பூசைக்கும் இந்திய அரசிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூன்று தீவுகளில் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ இந்திய அரசு ஏறபாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதனை மேற்கொள்ளவுள்ள நிறுவனத்தின் ஒரு பொறியியலாளர் உரிய இடங்களைப் பார்வையிட வந்த சமயம், கட்சி ஒன்றைச் சார்ந்த சிலர் தனிப்பட்ட முறையில் அவரைத் தம்முடன் கூட்டிச் சென்று மேற்படி மின்திட்டங்களுக்கான பூமி பூசை என்ற பெயரில் சில ஆரவாரங்களை – எடுப்புகளை – மேற்கொள்கின்றனர் எனச் செய்திகள் வெளிவருகின்றன.

திட்டத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் உப ஒப்பந்தங்களின் அடிப்படையில் சில, பல வேலைகளை மேற்கொள்ளவுள்ள நிறுவனம் அந்த இடங்களைப் பார்வையிட வந்த சமயம் சிலர் அழைத்துச் சென்று தம் விருப்புக்கு ஏற்ப இப்படி ஏதும் செய்யாலாம். அங்கே இப்படி மேற்கொள்ளப்படும் நிகழ்வுகள் எவையும் சம்பிரதாய நிகழ்வுகள் கிடையா. அவை ஆரம்ப நிகழ்வுகளாகவும் கொள்ளப்படமாட்டா.

இந்திய அரசின் நிதி உதவியில் மேற்கொள்ளவுள்ள இத் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகளை இந்திய அரசு உத்தியோகபூர்வ பகிரங்க அறிவித்தல் மூலம் மட்டுமே மேற்கொள்ளும்.

இவற்றிற்கு அப்பால் ஒப்பந்த நிறுவனத்தின் பொறியியலாளர் இடம்பார்க்கும்போது மேற்கொள்ளும் நிகழ்வுகள் இந்திய அழசின் நிகழ்வுகளாக காணப்படமாட்டாது என யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

அந்தியேட்டி மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பிதழ்



அன்புடையீர்!

கடந்த 27.03.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கந்தையா நவரட்ணம்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (24.04.2024) புதன்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் கோவில் அருகாமை, கல்வியங்காடு) நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 45, மணிக்கூட்டு கோபுர வீதி,
பெருமாள் கோவில்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.
077 526 5715

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இலவசக் கல்வியைக் காப்போம்!

ஆரியக் கூத்தாடினாலும் நாம் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். இல்லையேல் நம்மைச் சூறையாடிப் போய் விடுவார்கள்.

மோசமான பொருளாதார வீழ்ச்சியை - நெருக்கடியை - சந்தித்திருக்கும் நாட்டை, அதிலிருந்து மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் சேர்ந்து பொருளாதாரம் தொடர்பான பல நடவடிக்கைகளை ரணில் அரசு எடுத்து வருகின்றது.

தவிர்க்கவே முடியாத - நெருக்கடியான - நாட்டுக்கும் மக்களுக்கும் கஷ்டங்களையும் சுமைகளையும் தருகின்ற - பல தீர்மானங்களையும், முடிவுகளையும் இவ்விடயத்தை ஒட்டி அரசு எடுக்கின்றது. பொருளாதார மீட்சிக்காக என்ற பெயரில் அவை முன்னெடுக்கப்படுகின்றமையால் வேறு வழியில்லை என்ற யதார்த்தத்தைக் கவனத்தில் கொண்டு அவற்றை மக்கள் சகித்துக் கொள்கின்றார்கள்.

ஆனால் மக்களின் இந்த சகிப்புத்தன்மையை சாதகமாக பயன்படுத்தி, வேறு பல அபாயகரமான திட்டங்களையும் அரசியல்வாதிகள் மக்கள் தலையில் கட்டி அடித்து விடப் பார்க்கின்றனர். அதனால்தான் அவை குறித்து நாட்டு மக்களாகிய நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கின்றோம்.

அத்தகைய ஒரு விடயத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் உரிய சமயத்தில் சுட்டிக்காட்டி, நாட்டையும் மக்களையும் எச்சரித்திருக்கின்றனர்.

நமது நாட்டில் நீண்ட கால இலவசக் கல்விப் பாரம்பரியத்துக்கு சாவு மணி அடிப்பது போல 2023 - 2033 ஆண்டுகளுக்கான தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு என்ற மோசமான சதித்திட்டத்தை அரசு முன்வைத்து நகர்த்துகின்றது என்ற ஆபத்தை பல்கலைக்கழக ஆசிரியர்கள் பகிரங்கமாக அம்பலப்படுத்தி இருக்கின்றார்கள்.

கல்வியில் அரசின் பொறுப்பை - கடப்பாட்டை - சத்தம் சந்தடியின்றி விலக்கிக் கொள்ளுதல், அரச கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளை மெல்லக் கைவிடுதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை ஒழித்தல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி இப்போது முன்மொழியப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்புத் திட்டம் நாட்டின் கல்வி முறையை முழுவதுமாக லாபம் ஈட்டும் வணிகமாக மாற்றுகிறது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுவது நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் ஆபத்தை ஏற்படுத்தும் ஓர் அவசர, அவசிய விடயம் பற்றிய எச்சரிக்கையாகும்.

அரசின் உத்தேச சீர்திருத்தங்கள் கல்வியின் தரம் மற்றும் மாணவர்கள், கல்வியாளர்களின் நலனை விட லாபத்தை முதன்மைப்படுத்துகின்றன. பல்கலைக்கழக மட்டத்தில் கட்டண விதிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், உயர்கல்விக்கான அரச நிதியை விலக்குவதன் மூலமும், சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையின் சமூக கட்டமைப்பில் மையமாக இருந்த கல்விக்கான சம அணுகல் கொள்கையை இந்த உத்தேச சீர்திருத்தம் இல்லாமலாக்கி, கல்வி வாய்ப்புக்கான சமவுரிமைத் திட்டத்தை நாசமாக்கப் போகின்றது.

மேலும், உத்தேச சீர்திருத்தம் பொருளாதாரம் சார்ந்த பாடங்கள் மற்றும் டிஜிட்டல் துறை மீது கவனம் செலுத்துகிறது. அது நல்லதுதான். ஆயினும், கல்வியறிவு, விமர்சன சிந்தனை மற்றும் குடியுரிமை போன்ற கல்வியின் பரந்த இலக்குகளை அது புறக்கணிக்கிறது. அதனால் சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்துகிறது.

புதிய கல்வித் திட்டத்தின் இந்தக் குறுகிய அணுகுமுறை நாட்டில் தற்போதுள்ள வர்க்கப் பிளவுகளை ஆழப்படுத்தி, சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்த கூடிய வகையிலும் அச்சுறுத்துகிறது என்பதை பல்கலைக்கழக ஆசிரியர்கள் விசனத்துடன் சுட்டுகின்றனர்.

இந்தத் திட்டம் அனுமதிக்கப்படுமானால் அது நாட்டில் இலவச கல்விக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஆரம்பமாக இருக்கும்.

இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக மாணவர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட பிற பங்குதாரர்களுடன் இணைந்து கடுமையாகச் செயல்படப் போவதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்திருக்கின்றது.

தங்களின் இலவசக் கல்வி வாய்ப்பு, கல்வித் துறை அணுகலுக்கான சம வாய்ப்பு ஆகியவற்றைத் தக்க வைத்துப் பாதுகாப்பதற்காக இந்தப் போராட்டத்தில் நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் களம் இறங்குவது தவிர்க்க முடியாத வாழ்வியல் கட்டாயமும் கடப்பாடுமாகும்.

# போர் நிறுத்தம் கிடையாது; இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு





பணய கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் விடுவிக்கும்வரை போர் நிறுத்தம் கிடையாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் தொடங்கி ஆறு மாதங்கள் நிறைவடைந்த நிலையில் இஸ்ரேல் அமைச்சரவை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

குறித்த கூட்டத்தின் பின் ஊடகங்ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பெஞ்சமின் நெதன்யாகு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றதை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் போர் அறிவித்தது.

காசா முனையை நிர்வகித்துவரும் ஹமாஸ் தாக்குதல் வினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்திய நிலையில் இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

அத்தோடு, காசாமுனையில் உள்ள பணய கைதிகளில் 100 இற்கும் மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் விடுதலை செய்திருந்தாலும் இன்னும் 130 பேர் காசாவில் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதில் 30 பேர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டனர் எனவும் அவர்களின் உடல்கள் ஹமாஸ் பிடியில் உள்ளன என்றும் தகவல் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், பணய கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டு வருகிறது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவர பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்ற நிலையில், அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து போன்ற நாடுகளின் மத்தியஸ்தத்தில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்த முயற்சிகள் மேற்கொளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்தில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் விரைவில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதுடன் இதற்காக இஸ்ரேலிய அதிகாரிகள் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் எகிப்து சென்றுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பெஞ்சமின் நெதன்யாகு மேலும் தெரிவிக்கையில்,

"நாம் வெற்றிபெற இன்னும் ஒருபடியே எஞ்சியுள்ள நிலையில் வெற்றிக்காக நாம் கொடுத்த விலை வலி நிறைந்தது.

பணய கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் விடுவிக்கும்வரை போர் நிறுத்தம் கிடையாது. அத்தோடு பணய கைதிகள் ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் தயாராக உள்ளது.

ஆனால், சரணடைய இஸ்ரேல் தயாராக இல்லாததால் ஹமாஸ் வலிமைபெறும் வகையில் சர்வதேச நாடுகள் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக சர்வதேச நாடுகள் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அது பணய கைதிகள் விடுதலைக்கான முயற்சிகளை அதிகரிப்பதோடு எங்களை யார் தாக்கினாலும் மற்றும் தாக்க நினைத்தாலும் நாங்கள் அவர்களை தாக்குவோம்.

இந்த கொள்கையை நாங்கள் அனைத்து நேரமும் பின்பற்றுவதோடு இப்போதும் பின்பற்றி வருகிறோம்." – என்றார்.

# ரஷ்யாவின் அணுமின் நிலையம் மீதான உக்ரைனின் தாக்குதலுக்கு ஐ.நா. கண்டனம்





ரஷ்யாவில் உள்ள அணுமின் நிலையத்தை குறிவைத்து, உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலுக்கு ஐ.நா. கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா சரியான நேரத்தில் பதிலடி தாக்குதல் நடத்தியதால், பெரும் அசம்பாவிதம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இல்லையெனில் அணுக் கதிர்வீச்சு ஏற்படும் நிலைமை உருவாகி இருக்கும் என தெரிவித்துள்ள ஐ.நா. அதிகாரிகள் இத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப் பெரிய அணுமின் நிலையமான ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி அணுமின் நிலையம் ஆரம்பத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் ஆரம்பமான போரையடுத்து, அந்த அணுமின் நிலையத்தை, ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

# ராமர் கோயிலை கட்டியதால் இண்டியா கூட்டணிக்கு ஆத்திரம்

## பிரதமர் மோடி கூறுகிறார்

காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணிக்கு ராமர் கோயில் கட்டியதால் ஆத்திரம் என பிரதமர் மோடி சாடியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடி இந்தியா முழுவது சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தாரில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“ராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் 500 ஆண்டு கால கனவு நனைவாகி உள்ளது. சத்தீஸ்கர் மக்கள் அதில் மகிழ்ச்சி கொள்வது இயல்புதான். காரணம், சத்தீஸ்கர்தான் ராமரின் தாய்மாமன் வழி இல்லம் இருந்த ஊர். ஆனால், காங்கிரஸ்/க்கும், இண்டியா கூட்டணிக்கும் ராமர் கோயில் கட்டப்பட்டதில் ஆத்திரம் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின் கீழ் இந்தியா ஊழலின் அடையாளமாகவே மாறியிருந்தது. சுதந்திரத்துக்குப் பின்னர், காங்கிரஸ் கட்சி தேசத்தை சூறையாட தங்களுக்கு பூரண அனுமதி கிடைத்தது போல் நடந்து கொண்டது. ஆனால்,



2014 இல் நம் ஆட்சி அமைந்த பின்னர் அந்த சூறையாடுதலுக்கான அனுமதி ரத்து செய்யப்பட்டது. அதற்கான அனுமதியை நீங்கள் எனக்கு கொடுத்தீர்கள். நான் அவர்களின் சூறையாடுதலைத் தடுத்து நிறுத்தினேன். அவர்களின் கடை மூடப்பட்டுவிட்டது.

அப்படியென்றால் அவர்கள் என் மீது கோபம் கொள்வார்கள் தானே. கோபத்தில் அவர்கள் என்னை எதிர்ப்பார்கள் தானே. இந்த எதிர்ப்புகளில் இருந்து என்னை யார் பாதுகாக்க முடியும்?. கோடிக்கணக்கான தேச மக்கள், என் தாய்மார்கள், சகோதரிகள் ஆகிய நீங்கள் தான் எனக்கான பாதுகாப்புக் கவசம்.” – என்றார்.

# மனு நீதி பேசுகின்ற பா.ஜ.கவுடன் பா.ம.க. கூட்டணி அமைத்தது ஏன்?

## உதயநிதி ஸ்டாலின் கேள்வி

மனு நீதி பேசும் பாஜகவுடன் பாமக கூட்டணி அமைத்தது ஏன்? என்று தருமபுரி தேர்தல் பிரச்சாரத்தில் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தருமபுரி மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ. மணிக்கு ஆதரவு கேட்டு தருமபுரி நகரில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் மேற்கொண்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தொடர்ந்து சமூக நீதியை பேசி வருகிறார். ஆனால், சமூக நீதிக்கு நேர் எதிரான மனு நீதி கொள்கை கொண்ட பா.ஜ.கவுடன் பா.ம.க. கூட்டணி அமைத்தது ஏன் என்பது தெரியவில்லை.

கடந்த 10 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. தமிழர்களையும், தமிழகத்தையும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. மொழியுரிமை, இட உரிமை, நிதியுரிமை என எல்லாவற்றிலும் தமிழர்களுக்கு பிரதமர் அநீதியை மட்டுமே இழைத்து வருகிறார்.



தமிழகத்தை வஞ்சித்து வரும் பா.ஜ.கவையும், அவர்களோடு கூட்டணியாக இருந்து தற்போது பிரிந்து நிற்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி இருக்கிற அ.தி.மு.க. கூட்டணியையும் வீழ்த்தி தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.” – என்றார்.

# நான் மாட்டிறைச்சி உண்பதில்லை; வதந்திகளை மறுக்கின்றார் கங்கனா

“நான் மாட்டிறைச்சி உள்பட எவ்வித இறைச்சியும் உண்டதில்லை. என்னைப் பற்றி அடிப்படை ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவது வெட்கக்கேடானது.”

– இவ்வாறு நடிகையும், பா.ஜ.க. மண்டி தொகுதி வேட்பாளருமான கங்கனா ரனாவத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“நான் பல ஆண்டுகளாக யோகா, ஆயுர்வேத வாழ்க்கை முறையை பின்பற்றுவதோடு அதை பிறருக்கும் பரிந்துரைத்து வருகிறேன். இப்போது வதந்திகளைப் பரப்பும் முயற்சியால் எனது பிம்பம் சிதையாது. எனது தொகுதி மக்களுக்கு என்னைத் தெரியும். நான் ஒரு பெருமித இந்து என்பதை அவர்கள் அறிவார்கள். எதுவும் என்னைப் பற்றி அவர்கள் தவறாக நினைக்கும்படி செய்யாது. ஜெய் ஸ்ரீ ராம்.” என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக மகாராஷ்டிரா காங்கிரஸ் பிரமுகர் விஜய் வடேட்டிவார் காட்சிரோலியில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில்,


“கங்கனா ரனாவத் ஒரு முறை எக்ஸ் தளத்தில் தனக்கு மாட்டிறைச்சி பிடிக்கும். அதைச் சாப்பிட்டுள்ளேன் எனக் குறிப்பிட்டிருக்கிறார் என்று பேசியிருந்தார். மேலும் இத் தேர்தலில் பா.ஜ.க. ஊழல்வாதிகளை தேடி சீட் வழங்கியுள்ளது.” என்றும் விமர்சித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், “நான் மாட்டிறைச்சி உள்பட எவ்வித இறைச்சியும் உண்டதில்லை. என்னைப் பற்றி அடிப்படை ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவது வெட்கக்கேடானது.” என நடிகை கங்கனா ரனாவத் எக்ஸ் தளத்தில் பதிலளித்துள்ளார்.

# நாட்டின் சட்ட கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு







”நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு சட்ட கட்டமைப்பும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் நடைபெற்ற கண்டி சட்டத்தரணிகளுடனான சிநேகபூர்வ சந்திப்பில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை தொடர வேண்டுமா அல்லது அதை மாற்றியமைப்பதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். சம்மதித்து விட்டு ஒவ்வொரு முறையும் முடிவை மாற்றிக் கொள்ளும் அவப்பெயர் இலங்கைக்கு உண்டு.

இதுவே நாட்டுக்காக எமக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பாகும். எனவே, இந்த நன்மையை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டப்பூர்வமாக்க எதிர்பார்க்கிறோம். நாட்டின் மீதான பொறுப்பில் இருந்து நாம் யாரும் தப்ப முடியாது. எனவே, அதனால் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் சிக்கித் தவிப்பதா அல்லது போட்டிமிக்க ஏற்றுமதி பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதா என்பதை முடிவு செய்து நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வலுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதற்கு தேவையான பௌதீக வளங்களும் மனித வளங்களும் எம்மிடம் உள்ளன. நம் நாட்டின் பல தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தங்கள் தொழிலை நடத்தி வருகின்றனர்.

இன்று உலகின் மிகப் பெரிய பெருந்தோட்ட நிறுவனம் இலங்கை நிறுவனத்திற்கு சொந்தமானது. மேலும், உலகின் மிகப்பெரிய தேயிலைத் தோட்ட நிறுவனம் இலங்கையில் உள்ளது. உலக அளவில் நமது ஆடைத் தொழிலுக்கு உயர்ந்த இடம் உண்டு.

எனவே, முயற்சி செய்தால் உலகை வெல்லலாம். எனவே, நாம் கூடிய விரைவில் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு திரும்ப வேண்டும். புதிய துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய அவசியமாக உள்ளது.

மேலும், நமது வர்த்தக நடைமுறைகளில் பெரிய மாற்றங்கள் இருக்க வேண்டும். பல சட்டங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் உலகம் ஏற்றுக்கொண்ட பல நவீன சட்டங்கள் இன்னும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உலகில் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், அந்த சட்ட கட்டமைப்பில் நாமும் இடம் பெற வேண்டும்.

பொருளாதார பரிவர்த்தனைத் திட்டத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தியுள்ளோம். டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவது டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

மேலும் புதிய சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் காலநிலை மாற்ற சட்டங்களை கொண்டு வருவும் எதிர்பார்க்கிறோம். மேலும், நாங்கள் புதிய நிதிச் சட்டங்களையும் வர்த்தகச் சட்டங்களையும் உருவாக்குகிறோம். புதிய வங்கிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையின் மூலம், அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டில் புதிய சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்படும். அது இலங்கையை நீண்டகால அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் வேலைத்திட்டமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தும் அதே வேளையில், ஏற்கனவே உள்ள சட்டங்களையும் திருத்த வேண்டும். இத்திட்டத்திற்கு பொருத்தமான நாடாக இலங்கை வெற்றிபெற, அதற்குரிய சட்டக் கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். நம் நாட்டில் முதலீட்டாளர்களைத் தக்கவைக்க முடியாததற்கு ஒரு காரணம், சட்ட நடவடிக்கைகளில் உள்ள தாமதமாகும்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் திறக்கப்படும் போது, கொழும்பு துறைமுக நகரை நிதி வலயமாக மாற்றுவதில் கவனம் செலுத்தியுள்ளோம். பின்னர் அது ஒரு கடலோர பொருளாதாரமாக மாறும். இது ஒரு தனித் துறையாக செயல்படுகிறது மேலும் புதிய விதிமுறைகளும் நடைமுறையில் உள்ளன.

மேலும், பெண்களை வலுவூட்டும் சட்டம் மற்றும் பாலின சமத்துவ சட்டத்தையும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார மாற்றத்தில் சட்டக் கட்டமைப்புகளும் நவீனமயமாக்கப்பட வேண்டும். 20 வருடங்கள் முன்னோக்கிப் பார்த்து முடிவெடுக்க வேண்டும். இன்னும் 20 வருடங்களில் நானும் இங்குள்ள பெரும்பாலானவர்களும் உயிருடன் இருக்க மாட்டோம். ஆனால் இங்குள்ள இளம் வழக்கறிஞர்கள் இந்த நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான கடைசி வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. எனவே நவீனமயமாகி உலகத்துடன் முன்னேறுவதா அல்லது பின்னோக்கிச் செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். 1948 இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து, நமக்கு கிடைத்த எந்த வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

ஆனால், இந்த ஆண்டு நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர வேண்டுமா அல்லது ஒழிக்கப்பட வேண்டுமா என்பதை இன்று நாடு எதிர்நோக்கும் மிக முக்கியப் பிரச்சினையாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர். அது முக்கியமில்லை என்று நினைக்கிறேன்.

அதனை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். நாட்டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியா அல்லது பிரதமரா என்பதல்ல இன்றைய முக்கியமான பிரச்சினை.

இலங்கையை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்பதே பிரச்சினை. எனவே, உண்மையான நோக்கத்திற்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைவரும் ஒன்றிணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.






# தமிழ் மண்ணுக்கு விரோதமான போக்கை டக்ளஸ் கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறார் சிறீதரன்

## பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அகழ்வு குறித்து அவர் கருத்து

(ந.லோகதயாளன்)

"கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைகள் புதியவையல்ல. இன்று, நேற்று என்று அல்ல, அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வந்த காலத்தில் இருந்தே தமிழர்களுக்கு எதிராக, விரோத நடவடிக்கைப் போக்குக் கொண்டவர் என்பது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்."

– யாழ் மாவட்டத்தின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அகழ்வு தொடர்பான ஆய்வுக்காக கடந்த 05 ஆம் திகதி அமைச்சர் சென்றிருந்த போது கிராம மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அணியினருக்கும் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கும் இடையில் களேபரமும் தள்ளுமுள்ளும் இடம்பெற்றிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஊடக சந்திப்பொன்றை நடத்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் கூறியவை வருமாறு:–

அவருடைய சண்டித்தன அரசியல் அல்லது அடாவடி அரசியல் என்பது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி என பல இடங்களில் அவர் நடந்து கொண்ட விதங்கள் மற்றும் முறைகள் எல்லோராலும் உணரபட்டவைதான். அதனால்தான் அவர் ஒரு தமிழ் தலைவராக வரமுடியவில்லை.

அவர் ஒரு நியாயமான – கௌரவமான – தமிழ்மக்களுடைய அபிலாசைகளை பிரதிநிதித்துவபடுத்துகின்ற – ஓர் அமைச்சராக, நாடாளுமன்ற உறுப்பினராக தன்னை அடையாளப்படுத்தியிருந்தால் தமிழ்மக்களுடைய வளங்களை கொள்ளையடிக்காமல் தமிழ் மக்களுடைய வளங்களை எதிர்கால சந்ததியினருக்கு பேணி வைத்திருக்க வேண்டும். இது எங்களுடைய சொத்து. எமது இனத்திற்கானது என்பதை அவர் பின்பற்றியிருந்தால் அவர் இன்று தமிழ் மக்களால் போற்றி புகழப்பட்டிருப்பார்.

ஆனால் தமிழர்களுடைய நிலங்களை அபகரிப்பதிலும், மணல் எடுத்து விற்பதிலும், இப்பொழுது கல்லைத் தோண்டி விற்பதிலும் அதிகமான கரிசனை கொள்ளுகின்ற அமைச்சராகத் தன்னை அடையாளப்படுத்துவது ஆரோக்கியமான விடயமல்ல.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமமானது பாரம்பரியமான ஈழவூர் என்கின்ற சரித்திர பிரசித்தி வாய்ந்த வரலாற்று அடிப்படைகளை கொண்ட பூர்வீகமாக வாழ்கின்ற மக்களை கொண்ட மண்ணாகும்.

அந்த பூர்வீக கிராமங்களில் இருக்கின்ற – எத்தனையோ ஆண்டுகள் பேணிப் பாதுகாக்கப்பட்ட – தமிழர்களின் சொத்தான முருகைக்கற்களை எடுத்து விற்று பிழைப்பு நடத்த முயற்சிப்பது மிகவும் மோசமானது. அது ஓர் இனத்திற்குச் செய்கின்ற வரலாற்றுத் துரோகம் ஆகும்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை உணர்ந்து செயற்பட வேண்டும். அடுத்த சந்ததிக்காகவாது அது தோண்டப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அது எமது இனத்துக்குரியது என்பதைச் சிந்தித்து கொள்ளவேண்டும்.

பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலை வரவில்லை. அதில் இருக்கும் முருகைக் கற்களை தோண்டி அதனை திருகோணமலைக்குக் கொண்டு செல்ல போகின்றார்கள். அதனால் பொன்னாவெளி கிராமத்தில் ஆழமான உப்புத்தண்ணீர் நிரம்பிய கிடங்குகள் உருவாக்கப்படும். இதேபோல் தான் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில் இவ்வாறான கல் எடுக்கப்பட்ட ஆழமான கிடங்குகள் உண்டு.

இதை விட மோசமாக பொன்னாவெளி கிராமத்தில் ஆழமான கிடங்குகள் கடலுக்கு அருகிலே தோண்டி கடல்நீர் கிராமத்திற்குள் உட்புகும் நிலைமை உருவாகும்.

அக்கிரம மக்கள் தொடர்ந்தும் அந்த மண்ணிலே வாழ முடியாமல் இடம்பெயர்கின்ற சூழ்நிலை ஏற்படும். எனவே இவ்வாறான செயற்பாட்டை அமைச்சர் உடனடியாக நிறுத்த வேண்டும். – எனவும் தெரிவித்திருந்தார்.



# கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரச்சினை; மக்கள் போராட்டம் நேற்று 15ஆம் நாளை எட்டியது

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் பதினைந்தாவது நாளாக நேற்றுக் கவனவீர்ப் புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் பிரதேச செயலகத்தின் முன்பாக பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக 15 ஆவது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டனர்.


















# கல்விக் கட்டமைப்பை லாபமீட்டும் வணிகமாக மாற்றுகிறது புதிய தேசியக் கல்விக் கொள்கை

## அதனைக் கடுமையாக எதிர்ப்போம் என்று யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

கல்வியின் தரம் மற்றும் மாணவர்களின் நலன் என்பவற்றை புறம் தள்ளி இலாபத்தையே நோக்காக கொண்டு உருவாக்கப்படும் தேசியக் கல்விக் கொள்கை கட்டமைப்பை நாங்கள் எதிர்க்கின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் ஐங்கரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை கட்டமைப்பானது எமது இலவச கல்விப் பாரம்பரியத்திற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது.

இந்தத் தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பானது இவ்வளவு காலமாக கல்வியில் அரசாங்கம் வைத்திருந்த பொறுப்பை முற்றாக மீளப்பெறுகின்றது. அத்துடன் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியையும் குறைத்துக் கொள்கின்றது.

மேலும் இக் கட்டமைப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற அமைப்பை முற்றுமுழுதாக நீக்குகின்றது. இந்த முன்மொழியப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை கட்டமைப்பு மிக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது .




இந்தத் தேசியஜ் கல்விக் கொள்கை கட்டமைப்பு தொடர்பில் முன்மொழிவுகளை முன்வைக்கும் பொழுது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தினரிடமோ, மாணவர் சங்கத்தினரிடமோ கலந்தாலோசிக்கப்படவில்லை.

இலங்கையின் கல்விக் கட்டமைப்பை முற்றுமுழுதாக இலாபம் உழைக்கும் வணிகமாக மாற்றுகின்ற செயற்பாடாகவே இது உள்ளது. கல்வியின் தரம் மற்றும் மாணவர்களின் நலன் என்பவற்றைப் புறம் தள்ளி இலாபத்தையே நோக்காக கொண்டு இந்தத் தேசியக் கல்விக் கொள்கை கட்டமைப்பு கொண்டு வரப்படுகின்றது.

பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனமும் அதனுடைய சகோதர சங்கமாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இந்தத் தேசியக் கொள்கைக் கட்டமைப்பை முற்றாக எதிர்க்கின்றோம்.

இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக ஏனைய அமைப்புகளான, மாணவர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் நாங்கள் இணைந்து இதனை எதிர்க்கவுள்ளோம். இந்த எதிர்ப்பில் மக்களாகிய நீங்களும் இணைந்து கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதை நாங்கள் நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளத்தின் உபதலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உப செயலாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக செயற்குழு உறுப்பினர் கலாநிதி அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் நாட்டில் திடீர் அதிகரிப்பு

நாடளாவிய ரீதியில் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 695 எச்.ஐ.வி. புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்ட பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி. அதிகரிப்பு தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர் –

கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், எச்.ஐ.வி. தொற்றாளர்களின்




எண்ணிக்கை 14 விகிதம் அதிகரித்துள்ளது. இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

மேலும் கொழும்பு மாவட்டத்தை பொறுத்தவரை பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், செயற்படும் சிகிச்சை நிலையங்களில் பதிவாகும் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கையில் 40 விகித அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக இளம் பருவத்தினரிடையே பாலியல் நோய் தொடர்பில் போதியளவிலான புரிந்துணர்வு இல்லாமை இதற்கு பிரதான காரணமாக உள்ளது.

ஆகையால், இது தொடர்பாக இளம் வயதினர் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

சில வேளைகளில் தனக்கு பாலியல் நோய் தொற்றுள்ளதா என்பதை கண்டறிய தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வலையமைப்பை பயன்படுத்தி சுய பரிசோதனையை செய்து கொள்வதோடு தேவையான உபகரணங்களையும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





## சித்திரைப் புது வருடத்தை முன்னிட்டு

# மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று பாரம்பரிய உணவுகளின் விற்பனைக் கண்காட்சி

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் கலாசார திணைக்களமும் இணைந்து சித்திரை வருடத்தை முன்னிட்டு நடத்திய பாரம்பரிய உணவு விற்பனைக் கண்காட்சி நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் கலாசார திணைக்களத்தின் தொலஸ் மக பஹன செயற்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியாளரின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான களமாக இவ்விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது.

இதில் பலர் ஆர்வமாக கலந்து கொண்டு நஞ்சற்ற உணவு பொருள்களைக் கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்





























# ஊடகக் கற்கைகள் மாணவர்களின் ‘ஆவணப்பட விழா - 2023’ நேற்று

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை 4ஆம் வருட மாணவர்களின் ‘ஆவணப்பட விழா -2023’ நேற்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் கலைப்பிட பீடாதிபதி கலாநிதி சி.ரகுராம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குனராஜா கலந்து கொண்டார்.

இதன் போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் 10 ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

இந் நிகழ்வில் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட ஏழு பேரின் விளக்கமறியலும் நீடிப்பு!

சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 07 பேரினதும் விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மாளிகாகந்த நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மருந்து கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மருத்துவ விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், வைத்தியர் கபில விக்ரமநாயக்க, மருந்து நிறுவன உரிமையாளர் உள்ளிட்ட 07 பேர் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 10 ஆவது சந்தேகநபராக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க



மற்றும் 11ஆவது சந்தேகநபரான மதிப்பீட்டு குழு உறுப்பினர், வைத்தியர் துசித சுதர்சன ஆகியோர் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் அவர்களது பிணை மனு மீதான உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முதலாவது சந்தேகநபரான மருந்து விநியோக நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜனக்க பெர்னாண்டோ, சாட்சி கூண்டிலிருந்தவாறு வாக்குமூலம் வழங்குவதற்கு சந்தர்ப்பம் கோரியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு உள்ள விசாரணை செய்யும் அதிகாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதனை செவிமடுத்த நீதவான், நீதிமன்றில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கு இல்லாத பிரச்சினையை பிரதிவாதியினால் எழுப்ப முடியாது எனச் சுட்டிக்காட்டினார்.

வாக்குமூலம் அளிக்கும் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபரால் கூறப்பட்ட விடயங்கள் வலுவானதல்ல எனவும் நீதிவான் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொறுப்பான வாக்குமூலமொன்றை வழங்கவேண்டிய தேவை இருப்பின், தம்மிடம் இரகசிய வாக்குமூலத்தை வழங்க முடியும் என நீதிவான் இதன்போது தெரிவித்துள்ளார்.

# நாற்றம் எடுக்கின்றது ஹட்டன் நகரம்

**(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)**

ஹட்டன் நகரில் உள்ள அனைத்து சாலைகளிலும் பிலாஸ்டிக் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன.

குறிப்பாக நகரைச் சுற்றிலும் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லும் அனைத்து வீதிகளிலும் உக்கும், உக்கா பொருள்கள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன.

இதனால் அப்பகுதியில் செல்லும் வழிப்போக்கர்கள் மூக்கை மூடிக் கொண்டு செல்கின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

சில நேரங்களில் பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்கள் ஆங்காங்கே தீ வைக்கப்படுகின்றமையையும் காணக் கூடியதாக உள்ளது.

அதேபோல் ஹட்டன் நகரில் உள்ள பிரதான பஸ் தரிப்பிடத்தில் உள்ள பொதுக் கழிப்பறை பகுதியில் கழிப்பறைக்காக கட்டப் பட்ட குழியில் இருந்து கழிவு நீர் கசிந்து வழிந்து கொண்டு உள்ளது. அதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதை உணரக் கூடியதாக உள்ளது.

இந்த இரு வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக நகர சபை செயலாளர் பண்டாரவிடம் தொலைபேசி மூலம் வினவிய போது, ஹட்டன் நகர சபைக்குக் குப்பை கொட்ட முறையான இடம் எதையும் அரசாங்கம் ஒதுக்கித் தரவில்லை, இந்த விடயம் தொடர்பாக பல முறை முன்பு இருந்த நகர சபைத்



தலைவர்கள் முயற்சி செய்தும் பலனில்லை, இம் முறை நாம் முயன்று கொண்டே இருக்கிறோம், வெகு விரைவில் இதற்கான தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம் என அவர் கூறினார்.

எது, எப்படியோ அன்றாடம் ஹட்டன் நகரில் பல ஆயிரக்கணக்கான மக்கள் நடமாட்டம் உள்ளது.

அத்துடன் நகரில் உள்ள குடிமக்கள் நலன் கருதி அரசு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை எதிர் வரும் தேர்தலுக்கு முன்னர் பெற்று கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் நகரில் உள்ள வர்த்தகர்கள்.



# 3 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளால் 1,025 மில்லியன் டொலர்கள் வருமானம்

2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் 6 லட்சத்து 35 ஆயிரத்து 784 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 1,025 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளது.

ஒரு வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இந்த வருடத்தில் பதிவாக வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் எனவும் அந்த எண்ணிக்கை 23 லட்சம் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# ஆறாயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கல்

2022/2023 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த – பொருளாதார சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் – 6 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான நிலுவைத் தொகையுடன் மே மாதம் முதல் இந்தப் புலமைப் பரிசில் தொகை வழங்கப்படும் என ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் மார்ச் முதல் மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வீதம் 24 தவணைகளுக்கு மேற்படி புலமைப்பரிசில் தொகை வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இதற்காக தெரிவு செய்யப் பட்ட மாணவர்களின் பட்டியல் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோக பூர்வ இணை யத்தளத்தில் (www.presidentsfund.gov.lk) வெளியிடப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 12 ஆம் திகதி விடுமுறை தினத்திலும் கூட விசேட அஞ்சல் பொதி விநியோக சேவை

அரச விடுமுறை தினமான எதிர்வரும் 12ஆம் திகதி, அஞ்சல் பொதிகளை விநியோகிப்பதற்கான விசேட சேவையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அஞ்சல்மா அதிபர் டபிள்யூ.எம். ஆர்.பி சத்குமார விடுத்துள்ள அறிக்கையில்இந்தவிடயம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையுடன் வரும் நீண்ட வார இறுதி விடுமுறையில், வாடிக்கையாளர்களின் தேவை மற்றும் வசதியைக் கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அரச விடுமுறை தினமான எதிர்வரும் 12ஆம் திகதி நாடளாவிய ரீதியில் விநியோகப் பிரிவுகளைக் கொண்ட அஞ்சல் மற்றும் உப அஞ்சல் நிலையங்கள் மூலம் வெளிநாட்டுப் பொதிகள் சேவை மற்றும் பொதுப் பொதிகள் விநியோகம் தொடர்பான விசேட சேவையொன்றை முன்னெடுப்ப தற்கு திட்டமிடப்பட்டுள்ளது.





# நிமாலைப் பதில் தலைவராகத் தேர்ந்த நேற்றைய கூட்டம் சட்டவிரோதமானது

## சு.கவின் மைத்திரி தரப்பு அறிக்கை

புதிய பதில் தலைவர் ஒருவரை நியமிப்பதற்காக நேற்று நடைபெற்றதாகக் கூறப்படும் சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடக் கூட்டம் சட்டவிரோதமானது என அக்கட்சியின் ஒரு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரிவினரே இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பங்குபற்றுதலுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடக் கூட்டம் நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது என அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் சட்டவிரோதமான அரசியல் பீடக் கூட்டம் நடைபெற்றதாக மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அரசியல் பீடக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கே உண்டு எனத் தெரிவித்த அந்த குழுவினர், மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட நீதிமன்றத் தடை உத்தரவின் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போது தலைவர் இல்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பதில் தலைவருக்கான எந்தவொரு நியமனத்துக்கான கூட்டமும் நீதிமன்ற உத்தரவின் ஊடாகவே நடத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

நேற்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடக் கூட்டத்தில் பங்குபற்றிய பலர் கட்சியின் அங்கத்தவர்கள் அல்லர் எனவும் அந்த குழு மேலும் தெரிவித்துள்ளது

நேற்றைய சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தரப்பு தெரிவித்துள்ளது.

# கொம்பனித்தெரு மேம்பாலம் நேற்று போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது




கொம்பனித்தெரு, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் ரயில் பாதைக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரட்டை மேம்பாலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மக்களின் பாவனைக்காகத் திறந்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் அடுத்த கட்ட நிர்மாணப் பணிகளை செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள், வைத்திய சாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட மிகவும் பரபரப்பான வர்த்தக நகரமான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள ரயில் கடவையின் காரணமாக நாளாந்தம் 03 மணித்தியாலங்கள் விரயமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மாகா பொறியியல் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ. ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அதலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




# முஸ்லிம்களின் மதநம்பிக்கையின் அடிப்படையில் நல்லடக்கம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“முஸ்லிம்களுக்கு தமது மதநம்பிக்கையின் பிரகாரம் நல்லடக்கம் செய்வதை உறுதி செய்வதற்கு புதிய குழுவொன்று நியமிக்கப்படும். அத்தோடு எந்த மதமாக, எந்த இனமாக இருந்தாலும் எந்த ஒரு நபரின் இறுதிச் சடங்கையும் அவரது இறுதி விருப்பத்திற்கு அமைய மேற்கொள்ள இடமளிப்பது தொடர்பிலும் இந்தக் குழு ஆராயும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி, கட்டுகெலே ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ரமழான் நோன்பைக் கூட சரியாக நோற்க முடியவில்லை.

கடந்த வருடம் முதல் பொருளாதாரம் மேம்பட்டு வருவதால், இன்று வழக்கம் போல் ரமழான் நோன்பு காலத்தை கழிக்கவும், ரமழான் நோன்பை நோற்கவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ரமழானின் போது முஸ்லிம் சமூகம் சிறப்பாக நோன்பை நோற்று நற்பண்புகளை வளர்த்துக் கொள்கிறது. ரமழான் பண்டிகையும் சிங்களப் புத்தாண்டும் ஒரே சமயத்தில் கொண்டாடப்பட இருக்கின்றன. இன, மத பேதமின்றி செயற்படக்கூடிய கலாசாரம் வரலாற்றில் இருந்து இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது கல்வி அமைச்சின் கீழ் பிரிவெனாக் கல்வி முறைப்படுத்தப்படுவது போன்று மத்ரஸா பாடசாலை கல்வியையும் கல்வி அமைச்சின் கீழ் மேற்பார்வை செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இஸ்லாமிய புத்தகங்களை தருவிப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள தடைகளை கண்டறிந்து அவற்றை நீக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த கொரோனா தொற்றுநோயின் போது, முஸ்லிம் சமூகம் தங்களின் இறுதிச் சடங்குகளை முறையாகச் செய்ய முடியாமல் மிகவும் வேதனையான சூழ்நிலையைச் சந்தித்தது. அந்த நிலையை எதிர்காலத்தில் மாற்றியமைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

மத ரீதியாகவோ அல்லது இறுதி உயில் மூலமாகவோ யாரேனும் தங்கள் விருப்பப்படி இறுதிச் சடங்குகளைச் செய்யக்கூடிய சட்டங்கள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். அடக்கம் அல்லது தகனம் செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. அவரவர் விருப்பப்படி செயற்படத் தேவையான விதிகளை நாங்கள் தயார் செய்வோம்.

இலங்கை மக்கள் இன்று ரமழான் நோன்பை அனுஷ்டிக்கின்ற போதும் காஸா பகுதியில் மிகவும் சோகமான நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகம் சுமார் முப்பத்தைந்தாயிரம் உயிர்களை இழந்துள்ளது. அதனால்தான் இந்த ஆண்டு தேசிய இப்தார் நிகழ்வை நடத்தாதிருக்க முடிவு செய்யப்பட்டதோடு அந்த பணத்தை காஸா முஸ்லிம் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் காஸா பகுதியில் பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதாகவும் உறுதியளித்துள்ளோம். பலஸ்தீன அரசை கலைப்பதை நாங்கள் ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம். எனவே, இந்தப் போரை நிறுத்துவதற்கு எமது ஆதரவை வழங்குகின்றோம்.” – என்றார்.

காத்தான்குடி பள்ளிவாசலினால் 10 மில்லியன் ரூபாவும், கட்டுகெலே ஜும்மா பள்ளிவாசலினால் 2.2 மில்லியன் ரூபாவும், முஸ்லிம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களினால் 3.5 மில்லியன் ரூபாவும் காஸா முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கண்டி, கட்டுகெலே ஜு/ம்மா பள்ளிவாசல் பிரதம மௌலவி சையித் மௌலானா, அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, அனுராத ஜயரத்ன, திலும் அமுனுகம, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# இன்றைய ராசி பலன்கள் - 08.04.2024




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது. அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக்கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு எற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டும். இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.அஜீரணக் கோளாறு காணப்படும்.




இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை. உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம். ஓய்வும் அமைதியும் தேவை.




இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் சுமுகமான நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள்.உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும்.நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும். உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புனரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி அல்லது உயர் அழுத்தம் காணப்படலாம்.




இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.பணவரவுக்கான வாய்ப்பு இல்லை. இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும்.




இன்றைய நாள் சீராக உள்ளது. திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம்இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும்.இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.அதிக சிரமங்கள் காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2024




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்தமாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும். அது உங்களுக்கு கவலையைத் தரும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குவீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது. பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப்புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதியான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை. அதிகரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிரத்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும்.அதிகமான எதிர்பார்ப்புகள் கூடாது.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கையாள்வதில் விழிப்புணர்வு அவசியம். மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக கால்களில் வலி காணபப்டும்.

